بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 28/04/2023 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் அருளுக்குரிய வழிகாட்டல்களின் ஒளியில், துன்பங்கள் மற்றும் இன்னல்களின் போது பொறுமையை கடைபிடிக்குமாறு அஹ்மதிகளுக்கு அறிவுரை**

*ஒவ்வோர் அஹ்மதியும் தம் பொறுப்புகளைப் புரிந்துகொண்டால், பல விவகாரங்களுக்கான தீர்வை நம் நடவடிக்கைகள் மற்றும் துஆக்கள் ஆகியவற்றில் இருந்து நாம் பெற முடியும்!*

أَشۡهَدُ أَنۡ لَّآ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ﴿۴﴾ إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ﴿۵﴾

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

பாகிஸ்தானிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ நிலவும் ஜமாஅத்தின் சூழ்நிலைகளைப் பார்க்கும் போது நாம் பொறுமை காப்பதற்குப் பதிலாக கொஞ்சம் எதிர் நடவடிக்கையை வெளிப்படுத்த வேண்டும் என்று சிலர் மிக அழுத்தமாக ஆதாரங்களுடன் எனக்கு எழுதுகிறார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் உதாரணங்களை எடுத்துரைத்தவாறு, சில இடங்களில் அன்னார் இதற்கு அனுமதி வழங்கி இருக்கிறார்கள் என்று எழுதுகிறார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களை நோக்கி சுட்டிக் காட்டப்படும் இவ்விஷயங்கள் முற்றிலும் தவறானவையாகும். சட்டத்தின் எல்லைக்குள் இருந்தவாறு அன்னார் சில விஷயங்களைப் பேசியிருக்கிறார்கள்தான்! ஆனால், சிந்திக்காமலோ புரியாமலோ கலகக்காரர்களைப் போன்று ஊர்வலங்களை நடத்துவதற்கு அன்னார் அனுமதி வழங்கவில்லை. எங்கேயாவது ஏதேனும் எதிர்ப்புக் குரல் எழுப்பப்பட்டிருக்கும் என்றாலும் கூட அது காலத்தின் கலீஃபாவின் அனுமதியின் கீழ் இருந்தது. ஒவ்வோர் அதிகாரியும் மக்களை ஒன்று திரட்டி எதிர்ப்புக் குரல் உயர்த்த வேண்டும் என்பது அல்ல!

இந்தியா பாகிஸ்தான் பிரிவினைக்கு முன்பாக ஆங்கிலேய ஆட்சி இருந்தபோது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களின் சொற்பொழிவுகளைக் கிளர்ச்சி விளைவிக்கும் சொற்பொழிவுகள் எனக் கூறி அன்னார் மீது கை வைக்கலாம் என நமது எதிராளிகளாக இருந்த சில அதிகாரிகள் முயற்சி செய்தார்கள். ஆனால், ஒவ்வொரு முறையும் அவர்கள் ஏன் தோல்வியுற்றார்கள் என்றால், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் எதிராளிகள் மற்றும் அரசாங்க அதிகாரிகளுக்கு அவர்களின் முகத்தைப் படம்பிடித்து காட்டிவிட்டு, எப்பொழுதும் ஜமாஅத்திற்கு இறுதியாக அறிவுரை

கூறும் போது, நபிமார்களின் ஜமாஅத்துகளின் வேலை பொறுமை காப்பதும் சட்டத்தைப் பேணி நடப்பதும் ஆகும் எனக் கூறுவார்கள். எதிராளிகளாக இருந்த அந்த அதிகாரிகள் முயற்சி செய்த போதெல்லாம் அவர்களின் திட்டங்கள் வீணாகிப் போய் வந்தன. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் இஸ்லாமிய போதனைக்கு எதிராகவோ அல்லது ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் போதனைக்கு எதிராகவோ ஏதாவது பேசியிருப்பார்கள் என்று கருத முடியுமா என்ன?

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் எண்ணற்ற இடங்களில் பொறுமையைக் குறித்தும் துஆவைக் குறித்தும் வலியுறுத்தும் போது,** "எவர்களின் பாதங்கள் மென்மையானவையாக இருக்கின்றனவோ, முட்களும் கற்களும் நிறைந்த பாதைகளில் என்னுடன் நடக்க முடியாதோ, எவர்களுக்குப் பொறுமை இல்லையோ அவர்கள் என்னை விட்டு விடலாம்" என்று கூறியுள்ளார்கள். ஆக இந்த பொறுமை (காக்கும் தன்மை)தான் உலகில் நம் ஜமாஅத்தின் தனிச்சிறப்பை நிலைநாட்டியுள்ளது.

**பல அரசியல்வாதிகளுக்கும், மீடியாக்காரர்களுக்கும் நான் பெரும்பாலும் கூறக்கூடிய பதில் என்னவென்றால்,** எவர்கள் எங்களுக்குத் துன்பம் இழைக்கிறார்களோ, அநீதி இழைக்கிறார்களோ அந்த மக்களில் இருந்து தான் (பலர்) அஹ்மதிகளாக ஆகி இருக்கிறார்கள்; இன்னும் ஆகிக் கொண்டிருக்கிறார்கள். அம்மக்களுடைய இயல்பைப் போன்றுதான் எங்களுடைய இயல்பும் இருந்தது. நாங்களும் அவர்களைப் போன்று எதிர் நடவடிக்கையைக் காட்ட இயலும்! ஆனால், நாங்கள் காலத்தின் இமாமை ஒப்புக் கொண்டுள்ளோம். அமைதியை நிலை நாட்டுவதற்கும் அல்லாஹ்வின் அருள்களுக்கு வாரிசாக ஆவதற்கும் அன்னார் எங்களுக்கு வழங்கிய போதனை என்னவென்றால், நீங்கள் அமைதியுடன் பணியாற்ற வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஆயினும், சட்டத்தின் எல்லைக்குள் இருந்து கொண்டு தம் உரிமைகளைப் பெறுவதற்கு முயற்சி செய்யுங்கள் என்று கூறியுள்ளார்கள்.

ஆக, இது நபிமார்களின் வரலாறு எனத் தெளிவாக வேண்டும். நாம் பொறுமையுடன் பணியாற்ற வேண்டும் என்பதே ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் நமக்கு வழங்கிய போதனையாகும்.

எவ்வாறிருப்பினும், இந்த பதிலால் மக்கள் வியப்படையவும் செய்கின்றனர்; அமைதியாக வாழும் மக்களின் எதிர் நடவடிக்கை இதுவே ஆகும் என்று புகழவும் செய்கின்றனர்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் பொறுமையை மிக அதி முக்கிய விஷயமாக எடுத்துக் கூறியுள்ளார்கள். இது நபிமார்களின் ஜமாஅத்துகளுடைய முக்கியத்துவம் வாய்ந்த, முதன்மையான கடமைகளில் ஒன்றாகும். இது இல்லாமல் ஒரு ஜமாஅத் முன்னேறவும் முடியாது; உலகைத் தன் பின்னால் வர வைக்கவும் முடியாது. இக்கடமையை நிறைவேற்றாமல் எந்த ஜமாஅத்தும் வெற்றியைக் கண்டதாக இல்லை என்று கூறியுள்ளார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** பொறுமை இரு வகைப்படும். முதலாவது (வகை) என்னவென்றால், எதிர் நடவடிக்கை மேற்கொள்ள மனிதனுக்கு ஆற்றல் இருக்கும். அவ்வாறிருந்தும் அவன்

பொறுமை செய்வது. இரண்டாவது (வகை) என்னவென்றால், எதிர்ப்பதற்கு ஆற்றலே இல்லாத நிலையில் செய்யக்கூடிய பொறுமை. அதாவது, கட்டாயத்திற்குள்ளான நிலையில் செய்யப்படும் பொறுமை. ஆற்றல் இருந்தும் செய்யப்படுகின்ற பொறுமை என்பது, அநீதி இழைப்பவர்களுக்கு பதிலடி தராமல் இருப்பதாகும். அல்லாஹ்ஹுக்காக பொறுமையை வெளிப்படுத்துவதாகும். கட்டாயத்திற்குள்ளான நிலையில் செய்யப்படும் பொறுமை என்பது, ஆற்றல் இல்லாமல் இருக்கும் நிலையில் வானத்தின் சோதனைகள் மற்றும் அல்லாஹ்வின் விருப்பம் ஆகியவற்றில் திருப்தியடைந்து, நன்றியுடன் செய்யும் பொறுமையாகும். பல்வேறு இடங்களில் அல்லாஹ் பொறுமையை வலியுறுத்தி கூறியுள்ளான். அல்லாஹ்வின் கட்டளைகளை முன்னிறுத்தி பார்க்கும்போது பொறுமைக்கு மூன்று பொருள் இருப்பது தெரிய வருகிறது. முதலாவது பொருள் என்னவென்றால், பாவத்தை விட்டு தப்பிப்பது ஆகும். பாவத்தை விட்டு தனது ஆன்மாவைத் தடுத்து நிறுத்துவதாகும். இரண்டாவது பொருள் என்னவென்றால், நற்செயல்களில் நிலைத்திருப்பதாகும். மூன்றாவது பொருள் என்னவென்றால், அழுது புலம்புவதை விட்டு விலகி இருப்பதாகும்.

முதலாவது பொருளைப் பொறுத்தவரை, தன்னை இழுக்க முயற்சிக்கும் தீமைகளைத் தொடர்ச்சியாகவும் உறுதியோடும் மனிதன் எதிர்கொள்ள வேண்டும். அத்துடன், இனிமேல் இழுக்கக்கூடிய தீமைகளை எதிர்க்கவும் அவன் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதாகும். இரண்டாவது பொருளைப் பொருத்தவரை, மனிதனுக்குக் கிடைத்த நன்மைகளில் அவன் உறுதியுடன் நிலைத்திருக்க வேண்டும் என்பதும், அத்துடன் அவனுக்கு இதுவரை கிடைத்திடாத நன்மைகளைப் பெறுவதற்கும் அவன் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்பதாகும். இதுவும் பொறுமையின் ஒரு வகையாகும். இது மனிதனுக்கு அல்லாஹ்வின் நெருக்கத்தைப் பெற்றுத் தருகிறது. இந்த நெருக்கம் துஆக்களினாலே கிடைக்கும்.

وَاسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ ۭ وَاِنَّهَا لَكَبِيْرَةٌ اِلَّا عَلَى الْخٰشِعِيْنَ ۝۴۶

என்று அல்லாஹ் கூறுகின்றான். அதாவது, ‘பொறுமை துஆ ஆகியவற்றின் மூலமாக அல்லாஹ்விடம் உதவி கேளுங்கள். நிச்சயமாக பணிவுடையவர்களைத் தவிர மற்றவர்களுக்கு இவ்விஷயம் கடினமானதாகும்.’ **(திருக்குர்ஆன் 2:46)**

அல்லாஹ்வின் அச்சம் உடையவர்களாகவும், பணிவை கடைபிடிக்கக் கூடியவர்களாகவும் இருப்போர் மட்டுமே இவ்வாறான பொறுமையை கடைபிடிக்க முடியும். அவர்கள் அல்லாஹ்வின் விருப்பத்தை விரும்பக் கூடியவர்களாக இருப்பார்கள்.

பிறகு இன்னோரிடத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

وَالَّذِيْنَ صَبَرُوا ابْتِغَآءَ وَجْهِ رَبِّهِمْ وَاَقَامُوا الصَّلٰوةَ وَاَنْفَقُوْا مِمَّا رَزَقْنٰهُمْ سِرًّا وَّعَلَانِيَةً وَّيَدْرَءُوْنَ بِالْحَسَنَةِ السَّيِّئَةَ

اُولٰٓئِكَ لَهُمْ عُقْبَى الدَّارِ ۝۲۳

அதாவது, ‘தங்கள் இறைவனின் திருப்தியை நாடி உறுதியாக நின்று செயலாற்றுபவர்கள், தொழுகையினை சிறந்த முறையில் நிறைவேற்றுபவர்கள்,

நாம் அவர்களுக்கு வழங்கியதிலிருந்து மறைமுகமாகவும் வெளிப்படையாகவும் நம்முடைய வழியில் செலவு செய்பவர்கள், நன்மையைக் கொண்டு தீமையை அகற்றுபவர்கள் ஆகியோருக்கே மறுமை வீட்டின் மிகச்சிறந்த நற்பலன் விதிக்கப்பட்டுள்ளது.' (திருக்குர்ஆன் 13:23)

ஆகவே, பொறுமை என்பது நிலையான தன்மையுடன், பணிவுடன், துஆவுடன் அல்லாஹ்வுடைய விருப்பத்தை நாடக்கூடியதன் பெயராகும். நாம் நம் நிலைகளை அல்லாஹ்வின் போதனைக்கேற்ப அமைத்துக் கொள்ளும் போது, நம் வாழ்வை அவ்வாறு கழிக்கும்போது, அல்லாஹ்வின் விருப்பத்தைப் பெறுவது நம் நோக்கமாக ஆகும்போது இது கிடைக்கும்.

நாம் எதிர்நடவடிக்கையை மேற்கொண்டால், நம் மீது இன்னும் கடுமையை அதிகரிக்கலாம் என்றும், நம்முடைய ஜமாஅத் அமைப்பின் மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்கு முயற்சி செய்யலாம் என்றும் எதிரி விரும்புகின்றான். தற்காலத்தில் சில அரசாங்க அதிகாரிகள் எதிராளிகளுக்கு மறைவாக அடைக்கலம் தந்து வருகிறார்கள். ஆகவே, இவ்வாறு எதிர் நடவடிக்கை மேற்கொண்டால் சூழ்நிலை மோசமாகிவிடும். இவ்வாறான சில சம்பவங்கள் ஜமாஅத்தின் வரலாற்றில் உள்ளன. அந்த சம்பவங்களின் காரணமாக ஜமாஅத்திற்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. ஆனால், பொறுமையுடன் சூழ்நிலையை மேம்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டபோது அதற்கான பயனும் கிடைத்தது. இவ்வாறு சில அதிகாரிகளின் மீது அதனுடைய நேர்மறை தாக்கமும் ஏற்பட்டது. அடிதடி போன்ற எதிர் நடவடிக்கையை நாம் மேற்கொண்டால் அதன் காரணமாக தப்லீகின் கீழ் இருக்கக்கூடியவர்கள் மீதும் தீய தாக்கம் ஏற்படும். 'நாங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ஜமாஅத்தில் இணையும் வகையில் அன்னார் எவ்வகையான மாற்றத்தை (அஹ்மதிகளிடத்தில்) ஏற்படுத்தினார்கள்?' என்று கேட்கும் உரிமை அவர்களுக்கு கிடைத்து விடும். ஆகவே, நாம் ஜமாஅத்தின் விரிவான பயனுக்காக கஷ்டங்களைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். மற்றவர்களுடைய கடுமைகளைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ள வேண்டும், பொறுத்துக் கொள்ள வேண்டும் என்றுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு போதனை வழங்கியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் பலர் பெருமானார் (ஸல்) அவர்களுடைய பொறுமையைக் கண்டும், பெருமானார் (ஸல்) அவர்களின் ஸஹாபிகளின் பொறுமையைக் கண்டும் நம்பிக்கை கொண்டார்கள். இந்த உதாரணங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) காலத்திலும் காணக்கிடைக்கின்றன. பலர் அன்னாருடைய பொறுமை, நல்லொழுக்கங்கள் ஆகியவற்றைக் கண்டு அன்னாருடைய ஜமாஅத்தில் இணைந்தார்கள். இன்றும் இதே நிலைகள் காணப்படுகின்றன.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் முஸ்லிம்கள் எதிர்கொண்ட அதே கஷ்டங்கள்தான் நம்முடைய ஜமாஅத்திற்கும் (வர) உள்ளன. நினைவில் கொள்ளுங்கள்! இறைவன் மீதுள்ள நம்பிக்கை உறுதியாவதற்கும், தூய மாற்றங்களுக்கான சந்தர்ப்பம் கிடைப்பதற்கும் இவ்வகையான கஷ்டங்கள்

வருவது கண்டிப்பானதாகும். நான் உங்களுக்கு இதையும் கூறிக் கொள்கிறேன். அதாவது, ஒருவர் இந்த ஜமாஅத்தில் இருந்து கொண்டு பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையோடு செயலாற்றவில்லை என்றால், அவர் இந்த ஜமாஅத்தில் இணையவில்லை என்பதை அவர் நினைவில் வைத்துக் கொள்ளட்டும். அல்லாஹ் இந்த அளவுக்கு இவ்விஷயத்தை வலியுறுத்திக் கூறி இருக்கின்றான். ஆகவே, உங்கள் விவகாரங்களை இறைவனிடத்தில் ஒப்படைத்து விடுங்கள். ஏச்சுப் பேச்சுகளைக் கேட்ட பிறகும் கூட சகித்துக் கொள்ளுங்கள். நான் பொறுமையைக் கையாளும்போது நீங்களும் பொறுமையைக் கையாள வேண்டும்.

இன்று உலகில் ஒவ்வொரு நாட்டிலும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் தூதுச் செய்தி சென்றடைந்து விட்டது; ஜமாஅத் நிலை பெற்று விட்டது. இது ஏதேனும் எதிர் நடவடிக்கையின் காரணமாகவோ அல்லது ஆற்றலை வெளிப்படுத்தியதன் காரணமாகவோ நிகழ்ந்ததா என்ன? அவ்வாறன்று! மாறாக, தியாகங்கள், பொறுமை மற்றும் துஆக்களின் விளைவாக இது நிகழ்ந்தது. ஆகவே, பொறுமையை எப்பொழுதும் நாம் வெளிப்படுத்தி வர வேண்டும்.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயம் அன்னாரை உடனடியாக ஏற்றுக் கொண்டு விட்டது. ஆகவே, அவர்களுக்குத் தம் சமுதாயத்தின் சார்பாக எவ்வித கஷ்டத்தையும் எதிர்கொள்ள வேண்டியது வரவில்லை. ஆனால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தம் சமுதாயத்தின் சார்பாகவே நிராகரிப்பு மற்றும் கஷ்டங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. பெருமானார் (ஸல்) அவர்களுடைய சோதனைகளின் தொடர் 13 வருடங்கள் வரை நீடித்தது. ஆனால், பொறுமை மற்றும் உறுதிப்பாடு ஆகியவற்றைக் கடைபிடிக்குமாறு இறைவன் சார்பாக அன்னாருக்கு வழிகாட்டல் வழங்கப்பட்டது. முந்தைய நபிமார்கள் பொறுமையை மேற்கொண்டது போன்று நீங்களும் பொறுமை செய்யுங்கள் என்று மீண்டும் மீண்டும் கட்டளை வந்து கொண்டிருந்தது. ஆகவே, பெருமானார் (ஸல்) அவர்கள் ஒருபோதும் சோம்பேறித்தனத்தைக் காட்டவில்லை. எப்பொழுதும் பாதங்களை முன்னோக்கியே வைத்தார்கள்.

ஓர் அஹ்மதி ஒரு கிராமத்திலிருந்து ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சமூகத்தில் ஆஜரானார். என்னுடைய கிராமத்தில் மதரஸாவில் பணியாற்றும் ஒரு மவ்லவி கடும் எதிரியாக உள்ளார். அவர் எனக்கு மிகுந்த துன்பத்தைக் கொடுக்கிறார். அல்லாஹ் அவரை அங்கிருந்து இடமாற்றம் செய்யுமாறு துஆச் செய்யுங்கள் என்று வேண்டிக் கொண்டார். அதைக் கேட்டு அன்னார் புன்னகைத்தவாறு கூறினார்கள்: நீங்கள் இந்த ஜமாஅத்தில் இணைந்திருக்கும் போது இதன் போதனையின்படியும் செயல்படுங்கள். துன்பங்கள் கிடைக்கக்கூடாது என்றால் பிறகு நற்கூலி எவ்வாறு கிடைக்கும்? இறைத்தூதரான பெருமானார் (ஸல்) அவர்கள் மக்காவில் 13 ஆண்டுகள் கஷ்டங்களை அனுபவித்தார்கள். ஆயினும், பொறுமையை மேற்கொள்ளுமாறே சாஹாபிகளுக்கு போதனை வழங்கினார்கள். இந்தத் தூய ஜமாஅத்தை உலகில் பரப்ப வேண்டும் என அல்லாஹ் நாட்டம் கொண்டுள்ளான். இவர்கள் மூலமாக இறைவன் உங்களுக்குப் பொறுமைக்கான போதனையை வழங்க

விரும்புகின்றான். சிறிது காலம் பொறுமையை மேற்கொண்ட பிறகு, இது ஒன்றுமே இல்லை என்பதை நீங்கள் காண்பீர்கள். துன்பம் கொடுப்பவர் தவ்பா செய்து விடுவார் அல்லது அழிந்து விடுவார். பொறுமை செய்யக்கூடியவர்களுக்கு கணக்கிலடங்கா எண்ணிக்கையில் நற்கூலி கிடைக்கும் என இறைவன் கூறியுள்ளான்.

**பிறகு, அன்னார் கூறுகிறார்கள்:** உலக மக்கள் காரணிகள் மீது நம்பிக்கை வைக்கின்றனர். ஆனால், இறைவன் கட்டாயத்திற்குட்பட்டவன் கிடையாது! ஆகவே, உங்களுடைய செயல்களைத் தூய்மையாக்கிக் கொள்ளுங்கள்; கவனமற்று இருக்காதீர்கள். கவனமற்று இருப்பவர் ஷைத்தானுக்கு இரையாகி விடுகின்றார். பாவ மன்னிப்பை எப்பொழுதும் உயிருடன் வைத்திருங்கள். அது பயனற்றதாகி விடக்கூடாது. உண்மையான பாவ மன்னிப்பு என்பது நல்ல விதையைப் போன்றதாகும். அதற்குரிய நேரத்தில் அது கனியைத் தருகிறது. அல்லாஹ்வின் சார்பாக பொறுமையைப் போதிக்கவே நாம் நியமிக்கப்பட்டுள்ளோம். அல்லாஹ் இம்மக்களுக்கும் நேர்வழி காட்டுவதற்காக நீங்கள் இவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி செல்வதில்தான் நம்முடைய வெற்றியும் இருக்கின்றது.

நமது வெற்றிக்கான ஆயுதம் இஸ்திக்ஃபார், தவ்பா, மார்க்க விஷயங்களை அறிந்திருத்தல், இறைவனின் கண்ணியத்தைக் கருத்தில் கொள்தல் மற்றும் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுதல் ஆகியவை ஆகும். ஆக, இந்த அறிவுரைகள்தான் நம்முடைய வெற்றிக்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக உள்ளன. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் வழிகாட்டல்களுக்கு ஏற்ப நாம் சரியான முறையில் அந்த அறிவுரைகளின் பக்கம் கவனம் செலுத்தி வந்தால் அதுவே நமது வெற்றியாகும். இன்ஷா அல்லாஹ் நமது வெற்றி விதிக்கப்பட்டுள்ளது. ஒவ்வோர் அஹ்மதியும் தம் பொறுப்புகளைப் புரிந்துகொண்டால், பல விவகாரங்களுக்கான தீர்வை நம் நடவடிக்கைகள் மற்றும் துஆக்கள் ஆகியவற்றில் இருந்து நாம் பெற முடியும்!

பொறுமை மற்றும் துஆக்களுக்கான நல்வாய்ப்பை அல்லாஹ் நமக்கு வழங்குவானாக! மேலும், தன் திருப்தியை பெறுவதற்காக இவ்விஷயங்களின்படி செயலாற்றும் நல்வாய்ப்பை நமக்கு வழங்குவானாக! ஆமீன்.

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ

اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ

يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ

يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**